**சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை - 2022**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் (**“**அதிகாரசபை”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை / தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1975 இன் 35 ஆம் இலக்க சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா, நுவரெலியா மற்றும் களுத்துறை பிரதேச அலுவலகங்களில் நிலையான வைப்புக்கள் மற்றும் வார வைப்புக்கள் முதலீட்டுப் பெறுமதி முறையே ரூபா 3,550,000 தொகை, ரூபா 4,807,420 மற்றும் ரூபா 1,616,380 இனால் குறைத்து பதியப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,973,800 இனால் குறைவடைந்திருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்குரிய களுத்துறை பிரதேச அலுவலகத்தின் நிலையான வைப்புக் கணக்குக்குரிய சரிசெய்தல்கள் 2023 ஆம் ஆண்டடில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் நுவரெலியா பிரதேச அலுவலகத்தின் நிலையான வைப்புக்குரிய வங்கிமீதி உறுதிப்படுத்தல் கடித்தில் குறிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 34,080,938 ஆகும். அதாவது இறுதிக் கணக்கில் காணணப்படுகின்ற பெறுமதி ரூபா 29,273,517 ஆகும். அதனால் அந்த பெறுமதிகளின் வேறுபாடான ரூபா 4,807,420 தொகை நிலையான வைப்புக் கணக்கில் வரவு வைத்து வட்டி வருமானக் கணக்கில் செலவு வைக்கப்படல் வேண்டும். இந்த சரி செய்தல்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். | ஆண்டின் இறுதியில் வங்கி வைப்பு மற்றும் முதலீட்டு மீதிக்கான மீதி உறுதிப்படுத்தல்களைப் பெற்று அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் காலி, மாத்தறை மற்றும் ஊவா பிரதேச அலுவலகங்களில் நிலையான வைப்பு மற்றும் வார வைப்பு வட்டி வருமானம் முறையே ரூபா 1,038,482 தொகை, ரூபா 149,079 மற்றும் ரூபா 53,801 குறைத்தும் இரத்தினபுரி மற்றும் நுவரெலியா பிரதேச அலுவலகங்களில் வட்டி வருமானம் முறையே ரூபா 697,933 மற்றும் ரூபா | காலி பிரதேச அலுவலகத்தில் வாராந்த கால வைப்புக்களுக்காக வட்டி வருமானமாக ரூபா 1,523,747 தொகை 2022 ஆம் ஆண்டில் காலி பிரதேச அலுவலகத்தில் இறுதிக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. கிடைக்க வேண்டிய வட்டித் தொகையான ரூபா 1,038,482 கணககீடு செய்யப்படாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் உரிய | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வைப்பிற்கான வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையின் பிரகாரம் இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 195,626 அதிகரித்தும் குறிப்பிடப்பட்டமையால் மொத்த வட்டி வருமானம் ரூபா 347,803 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாத்தறை பிரதேச அலுவலகத்தின் இறுதிக் கணக்கில் வட்டி வருமானமாக ஆண்டடின் போது கிடைத்த வாராந்த கால வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,861,352 மற்றும் நிறுவனத்தின் ஊழியர் கடனுக்காக கிடைத்த வட்டி ரூபா 357,339 தொகையுடன் கூட்டு மொத்தமாக ரூபா 2,218,692 தொகை காண்பிக்கப்பட்டுள்ளது. அதனால் ரூபா 208,259 மேலதிகமாக காண்பிக்கப்படாதிருந்ததுடன் கிடைக்க வேண்டிய வட்டிப் பணமான ரூபா 149,080 கணக்கீடு செய்யப்படவில்லை. அப்பெறுமதி மற்றும் ஊவா பிரதேச அலுவலகத்தின் 2022 ஆம் ஆண்டிக்குரிய ரூபா 53,081 வட்டி வருமானம் 2023 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டில் கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் ரூபா 10,887,428 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 03 பிரதேச அலுவலகங்களில் கிடைக்கவேண்டியவ வட்டி வருமானம் ரூபா 1,241,363 குறைத்தும், 02 பிரதேச அலுவலகங்களில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 5,400,547 அதிகரித்தும் குறிப்பிடப்பட்டிருந்தமையால் மொதத் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் | காலி பிரதேச அலுவலகத்தில் வாராந்த வைப்புக்காக கிடைக்க வேண்டிய வட்டிப்பணமான ரூபா 1,038,482 மற்றும் மாத்தறை பிரதேச அலுவலகத்தின் இறுதிக் கணக்குகளில் கிடைக்க வேண்டிய வட்டிப் பணமான ரூபா 149,080 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த சரி செய்தல்களும் ஊவா பிரதேச அலுவலகத்திலும் 2022 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 53,081 வட்டி வருமானம் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வைப்பு வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா 4,159,184 இனால் அதிகரித்திருந்தது. | மற்றும் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தக்குரிய வட்டி வருமானாக அதிகரித்து காண்பிக்கப்பட்ட ரூபா 397,500 தொகையும் 2023 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2022 ஆம் ஆண்டில் நுவரெலியா பிரதேச அலுவலகத்தில் நிலையான வைப்பிற்குரிய வேறுபாடான ரூபா 4,807,420 சரி செய்தல்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்.

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | நானாவித இருப்பு | 17,406,500 | 14,091,696 | 3,314,804 | 2023 ஆம் ஆண்டு வரையில் நானாவித இருப்புக் கணக்கின் மீதி மற்றும் பௌதீக மீதிகளுக்கிடையில் வேறுபாட்டிறற்கான காரணங்களை இணங்கண்டு அதற்குரிய சீராக்கங்கள் அதற்குரிய கணக்குகளில் மேற்கொள்ளப்படும் என அறியத் தருகின்றோம். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | காலி பிரதேச அலுவலகம் | | | | | |
| | கூட்டுப் பசளை இருப்பு | 134,025 | 394,965 | 260,940 | காலி பிரதேச அலுவலகத்தில் கூட்டுப்பசளை மற்றும் 500 நாற்று மேடை செயற்றிட்டங்களின் இருப்பின் பெறுமதி பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டுள்ள அளவுடன் | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | 500 நாற்று மேடை செயற்திட்டங்களின் இருப்பு. | 401,998 | 2,278,166 | 1,876,168 | | |

| | | | |
|---|---|---|---|
| | | | பட்டோலைகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பிரகாரம் பரீட்சை மீதியில் சீராக்கும் வகையில் பட்டோலைகள் மீதியும் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அதிகார சபையின் தற்போதைய பொது முகாமயாளர் அந்தப் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு கடிதக் கோவை மற்றும் அந்த உத்தியாகத்தரின் ஆளணிக் கோவைகள் இரண்டு சந்தர்ப்பங்களின் போது முறையே 2023 சனவரி 10 மற்றும் மார்ச் 07 ஆம் திகதிகளில் கணக்காய்விற்காக கோரப்பட்ட போதும் 2023 மே 31 ஆம் திகதி வரையில் உரிய கோவை வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய பொது முகாமையாளர் பதவிற்குரிய ஆட்சேர்ப்பு கோவை மற்றும் அந்த உத்தியோகத்தரின் ஆளனிக் கோவை உரிய கோவை | அமைச்சின் செயலாளருக்கு தேவையான கடமைகளுக்காக கையளிக்கப்பட்டமையால் அரசாங்கத்தின் கணக்காய்வுப் பிரிவிற்கு இதுவரை கையளிப்பதற்கு முடியாதிருந்ததுடன் உரிய நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் உடனடியாக கோவையினை கணக்காய்விற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சு செயலாளரின் MPI/Admin/11/TSHDA/ நிறுவன அலுவல்கள் Vol.viii ஆம் இலக்க 2023 மார்ச் 17 ஆம் திகதிய கடிதத்தில் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் அந்தக் கோவை அமைச்சுக்கு கையளிக்கப்படாமையினால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1998 இன் பசளை கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் பசளை மற்றும் கரைசல்களை விசிறும் இயந்திரம் மற்றும் தராசு போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக சிறு தேயிலைத் தோட்ட சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய கடன் மீதியான ரூபா 4,278,581 தொகை 24 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவக்கைகள் எடுக்காமல் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தப் பணத்தை அறவிடுவதற்கு பிரதேச அலுவலகத்தின் மூலம் சங்கங்களுக்கு எழுத்து மூலம் அறித்தல் பல சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சங்க உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு வரவழைத்து அறவிடவேண்டிய பணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டு அறவிட்டு, மேலும் அறவிடப்படாத தொகை அளவினை ஒட்டுமொத்த சபைக்கும் அனுப்பி அறவிட கூடிய அளவுக்கு ரூபா 4.27 மில்லியன் 1998 இலிருந்து நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களில் கீழ் கிடைக்க வேண்டிய நிதியாக காண்பிக்கப்பட்டு முன்கொண்டு வரப்படுகின்றது. 24 வருடங்கள் முதல் காணப்படுகின்ற மீதியாக இருந்தமையால் அமைச்சினால் அரச நிதி திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் இறுதிக் கணக்குகளில் தொடர்ந்தும் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. அறியத்தருகின்றோம். மேலும் 24 வருடங்கள் முழுவதும் பேணிச்செல்லப்படுகின்ற இந்த கணக்குகள் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திலும் பணிப்பாளர் சபை பத்திர மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1998 ஆம் ஆண்டில் நிறப்பிரிகை இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தனியார் தேயிலை மூலம் நான்கு தனியார் தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 5,916,589 கடன் தொகை 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஈரியகொல்ல தொழிற்சாலையில் கிடைக்க வேண்டிய ரூபா 2,436,449 தொகைக்காக மாத்திரம் இருந்ததுடன் இரண்டு தொழிற்சாலைகளின் உடன்படிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாது இருந்தது. | நிறப்பிரிகை இயந்திரங்கள் வழங்கப்பட்ட 04 தேயிலை தொழிற்சாலைகளில் ஈரியகஹ தொழிற்சாலை மாத்திரம் சட்டரீதியான நடவடிக்கையின் கீழ் பணத்தை அறவிடுவதற்கு வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. காலி பல் நோக்கு சேவை கூட்டுறவு சங்கங்களின் மூலம் தேயிலை தொழிற்சாலைகளின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்த போதும் கலைக்கும் போது அதிகார சபைக்கு அறவிட வேண்டிய பணத்தை விடுவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய 02 தொழிற்சாலைகளின் உடன்படிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளினால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாது இருந்தது. வழக்கு நடவடிக்கைகளின் மூலம் அறவிடப்படுகின்ற அளவுகளின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் இருந்து இந்த பணத்தை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டின் போது சிறுதேயிலை தோட்ட அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 23 வாகனங்களின் விற்பனையில் இருந்து கிடைத்த ரூபா 9,155,483 தொகை மற்றும் மண் பாதுகாப்பிற்காக 2020 ஆம் ஆண்டின் போது நுவரெலியா மற்றும் இரத்தினபுரி என்ற பிரதேச | வாகன விற்பனையில் இருந்து கிடைத்த தொகையில் நிதிக் குத்தகை முறைமையில் 03 வாகனங்கள் திறைசேரியில் இருந்து கோரப்பட்டிருந்தது. அந்த கோரிக்கை நிறைவேற்றுவதாயின் வாகன விற்பனையில் இருந்து | திறைசேரியில் இருந்து கிடைத்த பணத்தை அங்கீகரிக்கப்பட்ட பணிகள் ஈடுபடுத்துவதற்கோ அல்லது மீள அனுப்புவதற்கோ நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அதிகார பிரதேசங்களின் விவசாயிகளுக்கு மானிய படி செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் சேமிப்பு ரூபா 13,815,113 தொகை 02 முதல் 24 வருடங்கள் வரையிலான காலம் அதிகார சபையினால் எந்தவொரு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது திறைசேரிக்கு அனுப்புவதற்கோ நடவடிக்கை எடுக்காமல், ''செலுத்த வேண்டியது'' ஆக நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கிடைத்த பணம் திறைசேரிக்கு வழங்குதல் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதுடன் மண் பாதுகாப்பிற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் சேமிப்பான அளவு எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மீள் பயிரிடல் மற்றும் மாணியங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை யின் VII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தி | உள்ளபடியான பதவி ஒன்றில் ஈடுபடுபவர் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர் அந்தப் பதவியில் பதிற் கடமைக்கு நியமிக்கப்படுவதாயின் அவருக்கு கிடைக்கின்ற மேலதிக ஊதியத்தில் 2/3 பங்கே செலுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு 03 பதவி கடமைகளை நிறைவேற்றும் படியாக உரிய சம்பளத்தில் ¼ படி செலுத்தப்பட்டமையினால் மேலதிகமாக செலுத்தப்பட்ட படியினை மாதாந்தம் அறவிட வேண்டுமென பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் | உரிய உத்தியோகத்தருக்கு பதில் கடமை கடமைகளுக்கு முடியுமா என்பது தொடர்பாக குறித்துரைத்த உறுதிப்படுத்தல் முகாமைத்துவ சேவை திணைக்களத்திலிருந்து பெற்று அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கும் மேலதிக படி ஒன்று செலுத்தப்பட்டிருக்குமாயின் அதனை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவைகளுக்கு இணங்காத மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணம் பகுதியாக அறவிடப்படுகின்ற போதும் உதவி பொது முகாமையாளர் (சேவை) இனால் 2021 மார்ச் 08 ஆந் திகதி முதல் 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை மனித வள முகாமைத்துவ பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேலதிமாக செலுத்தப்பட்ட ரூபா 84,189 மீள அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அதிகார சபையின் பொது முகாமையாளரின் இலக்கம் ஆ/3/4/IV(i) இலக்க 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதிய உப அலுவலகம் மற்றும் தேயிலை பரிசோதனை / நீடிப்பு அலுவலக வாடகைப் பணம் தொடர்பான ஆலோசனை பத்திரம் | வலய அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக செலுத்த முடியுமான மாதாந்த வாடகை ரூபா 5,000 ஆக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டிற்காக தெரணியகல அலுவலக வலயத்திற்காக மாதாத்திற்கு ரூபா 15,000 வீதம் அலுவலக வாடகை 180,000 அதிகார சபையால் தெரணியகல பிரதேச சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 120,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2018 இல் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கை ஆலோசனையின் தேயிலை பரிசோதனை உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக ரூபா 3,000 தொகையும் வலய தேயிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகத்திற்காக ரூபா 5,000 தொகையும் ஆக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் அரச நிறுவன கட்டிடத்தை பயன்படுத்துகின்ற அலுவலகங்களுக்காக அந்த அரசாங்க நிறுவனம் மூலம் எமக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஆலோசனை பத்திரத்தின் பிரகாரம் செலுத்த வேண்டியிருந்தது டன் தேவை ஏற்படுமாயின் ஆலோசனை பத்திரத்தை திருத்தி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2010 | அதிகார சபையின் உதவி பொது முகாமையாளர் (சேவை) பதவி தற்போது பதவியில் ஈடுபடுபவருக்கு | உரிய பதவியை ஸ்தாபிப்பதற்காக இடமளித்த மேல் நீதிமன்றத்தால் | அவதானிப்புக்களுக்குரிய பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த |

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் 22 ஆந் திகதிய DMS/E4/08/5/070/2 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் இலக்கம் 30 இன் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல் தொடர்பான கடிதத்தில் பந்தி இலக்கம் 02 மற்றும் இணைப்பு | மாத்திரம் தனிப்பட்டரீதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் இந்த பதவிக்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளாதிருக்கும் போது அதிகாரசபையினால் உதவி பொது முகாமையாளர் (சேவை) பதவிக்காக விண்ணப்பம் கோரி 2010 யூலை 06 ஆந் திகதி நேர்முக பரீட்சைக்கு 2010 ஆகஸ்ட் 02 ஆந் திகதி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | வழங்கப்பட்ட வழக்கு தீர்ப்பு மற்றும் அந்த வழக்கு தீர்ப்பை அடிப்படையாக கொண்டு வெற்றிடமான பதவிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்பாக இருந்ததுடன் வெற்றிடம் ஆன பதவி ஒன்றின் பதவியில் ஈடுபட முடியாது இருந்தமை. பொதுவான நிருவாக நிலைமையின் பிரகாரம் கருதும் போது உறுதிப்படுத்தும் விடயமாக இருந்தது. | நியமனம் மேற்கொண்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரனை நடாத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 283,198,552 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 171,795,953 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 454,994,505 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் அபிவிருத்தி மானியம் ரூபா 1,214,480,354 இனால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 406,100,051 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வு

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கிடைத்த அரசாங்கத்தின் மானியம் 91 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் மீண்டெழும் மானியம் 7 சதவீதத்தால் அதிகரித்திருந்து. எனினும் அபிவிருத்தி செலவினம் 57 சத வீதத்தினால் குறைவடைந்த போதும் செயற்பாட்டு செலவினம் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 111 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதங்கள் முறையே 1.4:1 மற்றும் 1.07:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் அந்த விகிதம் முறையே 1.6:1 மற்றும் 1.3:1 ஆக காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் 42 சதவீதத்தால் குறைவடைந்தமை, நடைமுறை மற்றும் விரைவுச் சொத்து விகிதங்களின் குறைவுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ‘‘இயந்திர ஊழிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்’’ இற்காக குழிகள் தோண்டும் 73 இயந்திரங்கள் அரச வணிக கூட்டுத்தாபனத்திலிருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்காக அந்த கூட்டுத் தாபனத்திலிருந்து பெறப்பட்டிருந்த விலைகள் ஒரு மாத கேள்விக் காலம் முடிவடைந்ததன் பின்னர் இயந்திரத்தைக் காள்வனவு செய்வதற்குரிய பெறுகைக் குழு தீர்மானித்தமையால் அதிகார சபைக்கு அந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் இயந்திரமொன்றுக்காக இணங்கப்பட்ட விலையினை விட ரூபா 23,008 அதிக விலையில் தனியார் கம்பனி ஒன்றிலிருந்து அந்த இயந்திரங்களை கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டமையால் மற்றும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.7.1(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 1,679,584 நிதிய ரீதியான நட்டம் அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது. | இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் அரசாங்கத்தின் பொருட்களை வழங்ககுவதற்குரிய முன்னுரமை நிறுவனமாக இருந்தமையால் உரிய உபகரணங்கள் அந்த நிறுவனத்திற்கு சொந்தமாக காணப்பட்டதா என முன்னரே உறுதிப்படுத்துதல், விலைகள் சமர்ப்பித்தல் அந்தப் பொருட்கள் வழங்குவதற்குரிய நிறுவனத்திற்று இயலுமை உள்ளதாக நிறுவனத்தின் உறுதிப்படுத்தலாக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் அந்த விடயங்களுக்குப் புறம்பாக தனியார் நிறுவனத்திலிருந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் போது உரிய நிறுவனத்தின் வழங்கும் இயலுமை காணப்படுகின்றதா என பரீட்சிதது ஏனைய வேறு முறையொன்று காணப்படவில்லை. 2021 செப்டம்பர் 22 ஆம் திகதிய கடிதம் மூலம் குழிகளைத் தோண்டுவதற்கான இயந்திர கட்டளை மிகுதி அளவினை வழங்குவதற்காக 03 மாத காலம் செலவாகின்றமையால் நாட்டின் டொலர் பற்றாக்குறை மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகளின் அடிப்படையில் குழிகளைத் தோண்டும் இயந்திரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளின் கீழ் வழங்குவதற்கு முடியாதிருந்ததாக அரசாங்க வணிக கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது. அவ்வாறே தேயிலை வெட்டும் இயந்திரத்தை மிகுதி அளவினை் பெற்றுக் கொள்வற்காக நவம்பர் 15 ஆம் திகதி வரையிலும் குழிகளைத் தோண்டும் இயந்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக 03 மாத காலம் கோரப்பட்டிருந்தது. திசம்பர் 22 ஆம் திகதி வரை அரசாங்க வணிக கூட்டுத்தாபனம் அல்லது | பெறுகைகள் வழிகாட்டி கோவைகள் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | அவர்களது வழங்குநர் ஏதாவது தாமதம் மேற்கொள்வதாயின் 07 நாட்களான குறுகிய காலத்தில் இந்த துணைப்பாகங்களின் கட்டளைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதிருந்தது. அதனால் சகல நடைறை ரீதியான விடயங்கனை கவனத்தில் கொண்டு உரிய இயந்திரம் சந்தை விலையில் சந்தை விலை முறைமையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமானது என பொதுமுகாமையாளரால் 2021.10.27 ஆம் திகதி நடைபெற்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குரிய அதிகாரசபையில் நடாத்தப்பட்ட கூட்ட தீர்மானத்தினையும் கவனத்தில் கொண்டு ஆலோசனை வழங்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 01 குழி தோண்டும் இயந்திரம் ரூபா 99,800 வீதம் 73 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் இறப்பர் அபிவிருத்தி தினைக்களத்திற்கு சொந்தமான காணி ரூபா 44,484,405 செலவினத்தில் கேகாலை பிரதேச அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அலுவலக கட்டடத்தின் நிர்மானிப்பதற்காக மாத்திரம் இணக்கப்பபாடு வழங்கப்பட்ருந்தமையும் நிலத்தின் உரித்துக்காக உறுத்துறுதி கோரமுடியாதிருந்தமையும் இது தொடர்பாக | அமைச்சின் நிதி ஏற்பாட்டின் மூலம் சேவைக் கட்டணம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் காலி மற்றும் கேகாலை மாவட்டங்களில் அல்லது நிர்மானங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு விற்கு 1974 இன் போது கையளிக்கப்பட்ட பயிர்ச்செய்கை நிலம் 1978 ஆம் ஆண்டின் போது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு கையளித்ததன் பின்னர் இந்தக் காணிப் பகுதி ‘‘கெலணிவெளி’’ தோட்டக் | இந்தக் காணி அதிகார சபைக்கு கையேற்பதற்கோ அல்லது சட்ட ரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டியிருந்தாகவும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் அதிகார சபையின் பொதுமுகாமையாளருக்கு 2022 ஆகஸ்ட் 02 ஆம் திகதி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட பொதும் 2023 மார்ச் 01 ஆம் திகதி வரையிலும் அவ்வாறான புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரித்து கையெப்பமிடப்பட்டிருக்க வில்லை. | கம்பனிக்கு உரிய தேவாலகந்தவத்தே பகுதியாக காணப்பட்டது. அதில் பெருந்தோட்டக் கம்பனியால் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திற்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 15 பேர்ச் அளவான காணி பிரதேசமொன்றில் மேற்கூறப்பட்ட ‘‘சேவைக் கட்டிடம்’’ அமைப்பதற்காக சிறிய தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு கடிதமொன்றினால் வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட் விடயங்களில் அடிப்படையில் இந்தக் காணியின் உரித்து காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமாக இருந்தமையும் கையளித்தல் மூலம் உரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அதிகார சபையினால் 2021 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நியமனம் வழங்கப்பட்ட 04 பிரதேச முகாமையாளர் பதவிகள் தொடர்பாக நேர்முகப் பரீட்சை சபை சரியாக புள்ளிவழங்காமை மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன் நியமனம் வழங்கியமை தொடர்பாக கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கையிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் அதிகார சபையால் எடுக்கப்பட்டிருகவில்லை. | முறையான நேர்முகப்பரீட்சை மூலம் புள்ளிகள் வழங்கப்பட்டதன பின்னர் அந்த நேர்முகப்பரீட்சை தீர்மானத்தை சவால்விடும் முறைப்பாடு செய்யும் முறைமை காணப்படவில்லை. பிரதேச மட்டத்தில் அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் பிரதேச முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றமையால் உரிய பதவி வெற்றிடம் நிறுவனத்தின் தேவையை பூர்த்தி செய்துகொள்வதற்காக விரைவாக நிரப்பப்பட வேண்டிய பதவியாக இருந்தமையால் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சு செயலாளரின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் உரிய பதவிகள் வழங்கப்பட்டிருந்தது. | பொருத்தமற்ற விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச் செய்து தகுதியான விண்ணப்பதாரர்கள் அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அவ்வாறே அந்த அங்கீகாரத்தில் உரிய பிரகாரம் கிடைத்திருந்தமையால் உரிய செயற்பாடுகில் வழுக்களுடனான நிலைமை காணப்படவில்லை. | |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தேயிலைச் சபையின் ரூபா 250 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2020 நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட ‘‘தேயிலைக் கன்றுகள் 25 மில்லியன் விஷேட செயற்திட்டம்’’ இன் கீழ் பிரதேச அலுவலகங்களின் மூலம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட 254 நாற்று மேடையாளர்களினால் நாற்று மேடையில் கன்றுகள் 75 சதவீத வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் இரண்டாவது தவணைப் பணம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நலனாளிகளுக்கு ரூபா 24,711,304 நிதி மற்றும் செயற்பாட்டு பொருள் உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாத நாற்று மேடையாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளை மீண்டும் அறவிடாமை, செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பாக பிரதேச அலுவலகங்களில் தேயிலைப் பரிசோதகர்களினால் பிரதேசங்களின் அத்தியவசிய தேவையான அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் ரூபா 22,276,855 தொகை செயற் திட்டத்தின் நிதி | முதலாவது தவணைப் பணம் வழங்கியதன் பின்னர் இரண்டாவது தவணைப் பணம் விடுவிப்பதற்காக நாற்று மேடை கட்டமைப்பில் 75 சதவீதம் தயாரித்து பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு இன்றிய நாற்று மேடைகளுக்கான இரண்டாவது தவணைப் பணம் விநியோகிக்கப்படுவதில்லை. அதன் பிரகாரம் 75 சதவீத நாற்று மேடைக் கட்டமைப்பு பூர்த்தி செய்யப்படாதிருந்த 254 நாற்று மேடைகளுக்காக இரண்டாவது தவணைப் பணம் வழங்கப்படவில்லை. இதன் போது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் இடையே களப் பரிசோதனை நடவடிக்கைகள் முற்றாக மேற்கொள்ளப்படாமையின் காரணமாக தேயிலை பரிசோதகர், கள உத்தியோகத்தர் பரிந்துரை பெற்றுக் கொள்ளுதல் தாமதம் அடைந்தமை இதற்கு காரணமாக இருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 123 பிரதேச செயலக பிரிவுகளில் 795 | செயற்திட்டத்தின் செயலாற்றலை கட்டியெழுப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியின் போது பகிர்ந்தளிக்கப் படாமையினால் அதிகார சபையினால் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குடியிருப்பாளர்களுக்கு தொழில் முயற்சியொன்றை கட்டியெழுப்பும் நோக்கமாக இருந்தது. அதில் 634 பேர்களுக்கு ஆரம்ப விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக செலுத்தப்படாத நிதி உதவியை பெறுபவர்களுக்கு அந்த பணத்தை மீண்டும் செலுத்துவதற்கும் அவ்வாறு முடியாதிருக்குமாயின் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் மூலம் நிதி ரீதியான நட்டம் ஏற்படாமல் இருப்பதற்கு கவனத்திற் கொள்ளப்படும். | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற் திட்டத்தின் மூலம் 08 பிரதேச அலுவலகங்களிலிருந்து மாதாந்தம் 05 மெற்றிக் தொன் வீதம் 40 மெற்றிக் தொன் உற்பத்தியொன்றை இலக்காகக் கொண்டு கூட்டுப்பசனை மூலப் பொருள் கூறுகளாக்கும் 08 இயந்திரங்கள் இலங்கை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திலிருந்து நேர் ஒப்பந்த முறைமையைப் பயன்படுத்தி 2,300,000 தொகையில் 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த இயந்திரங்களின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற அளவில் இயலளவு காணப்படாமையின் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை 37 மெற்றிக்தொன் இருப்பு மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது | சிறு தேயிலைத் தோட்ட உரியாளர்களில் 05 இலட்சத்திற்கும் அளவிலான மற்றும் தேசிய தேயிலை உற்பத்தியில் 75 சதவீத பங்களிப்பு வழங்குகின்ற சிறு தேயிலைத் தோட்ட விருத்தி அதிகார சபை 08 பயிற்சி நிலையங்களில் விவசாயிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக அரச வணிக கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யும் முறைமையின் கீழ் (அமைச்சரவை அங்கீகாரத்துடன்) கொள்வனவு செய்திருத்தல். அதன் பிரகாரம் விவசாயிகளைப் பயிற்சி அளித்தல் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டதுடன் உற்பத்தி விற்பனை செய்தல், உற்பத்தி இலக்கிடப்பட்ட அளவிற்கு மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் | கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களை பயன்படுத்தி திட்டமிடப்பட்ட முறையில் மாதாந்தம் 40 மெற்றிக் தொன் வீதம் கூட்டுப் பசளை உற்பத்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்தவொரு உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 வரையில் மீண்டும் அரச கொள்கையின் அடிப்படையில் சேதனப்பசளை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எங்களால் குவிக்கப்பட்ட உற்பத்தியில் மேலும் தொடக்கம் வருமானம் அதிகரித்தல் மற்றும் பணத்தை உழைக்கும் நோக்கத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ரூபா 2,801,891 பெறுமதியான அலுவலக உபகரணங்களில் 17 விடயங்கள் பிரதான அலுவலகத்திற்கும், ஏனைய பிரிவுகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்களுக்குரிய கணக்குகள் பதியப்படாமல் நானாவித இருப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்காக நானாவித இருப்புக் கணக்கு சரிசெய்யப்பட்டுள்ளது. | சொத்துகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேகாலை பிரதேச அலுவலக கட்டிட திறப்பு விழாவிற்காக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி சட்டத்தின் அதிகார சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களின் பிரகாரம் சிறு தேயிலை தோட்டங்களுக்கு, தொழிற்சாலைகளுக்கும் தேயிலை காணி அபிவிருத்திக்கும் மற்றும் அதில் ஈடுபட்டவர்களின் சம்பவங்களுக்காக தேவையான சகல நடவடிக்கைகளும் அதிகார சபையினால் எடுக்கவேண்டியிருந்த போதிலும் அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு பதிலாக | 1975 இன் 35 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களின் பிரகாரம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு தொழிற்சாலைகள் மற்றும் தேயிலைக் காணிகளுக்காக தொடர்புடைய சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கத்தால் கணிசமான தொகை செலவிடப்பட்ட போதிலும் கட்டிட செயற்பாடுகளுக்காக மக்கள் உரித்திற்கு கையளித்தல் வேண்டும். நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகபூர்வ தலைவரான பிரதேச | சட்டத்திற்கு முரணான பணிகளை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகார சபையின் இலட்சினையுடன் கடிதத் தலைப்பு மற்றும் பதவிகளை பயன்படுத்தி அதிகார சபையில் இல்லாத கணக்குப் பிரிவிற்கு சங்கங்களின் கோரிக்கையிட்டு நிதி சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் செலவிடப்பட்ட முறை தொடர்பாகவும் விரிவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முகாமையாளரால் இந்த அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி உதவிகளை சேகரித்தல் போன்ற இல்லாதிருந்தமையால் சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தை மீறியிருக்கவில்லை. அதன் பிரகாரம் விளையாட்டுதுறை விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் உத்தியோகபூர்வமாக பிரதேச முகாமையாளராக இருந்தமையால் மற்றும் சிறு தேயிலை தோட்ட மக்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் இனங்காணப் படாதிருந்தமையால் பிரதேச முகாமையாளரால் அந்த பதவிகளைப் பயன்படுத்தி பிரதேச அமைப்புக்களின் கோரிக்கைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. | |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (ஆ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரம் விடயம் தொடர்பான விஷேட நிபுணர்கள்/ அது தொடர்பான அறிவுள்ளவர்கள் ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவர் அல்லது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் உள்ளடக்க வேண்டி இருந்த போதிலும் ‘‘தேயிலை பயிர்ச் செய்கை பொறிமுறை இயந்திரப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2021’’ இற்காக குழிகள் தோண்டும் 73 இயந்திரங்களைக் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச நானாவித வணிகக் கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூறுவிலை கோரப்படாதிருந்த சந்தர்ப்பமொன்றில் வழிகாட்டிக் கோவையின் சகல விடயங்களும் அவ்வாறே அமுல்படுத்தும் தேவை என்ன என்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதிகார சபையினால் இந்த பொருட்கள் 2019 ஆம் ஆண்டின் போது | பெறுகைகள் வழிகாட்டியினை மீறியமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்காக விஷேட அறிவுடன் உள்ள அங்கத்தவர் ஒருவர் அல்லது மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்டமையினால் அதன் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் இந்த கொள்வனவுக்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் 2021 ஆம் ஆண்டு வரையிலும் அந்த இயந்திரங்கள் மிகவும் சிறந்த நிலையில் செயற்படுதல் தொடர்பாக கவனத்திற் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உத்தியோகத்தர்களுக்குள்ள அனுபவத்தின் அடிப்படையில் பெறப்பட்ட மிகவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமான விடயத்தின் அடிப்படையில் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. உபகரணங்களை கொள்வனவு செய்யும் போதும் உபகரணங்களின் தரத் தன்மை தொடர்பான பிரச்சினைகளான நிலைமை ஏற்படுவதைத் தடுக்கப்பட்டிருந்தமை தயவுடன் சுட்டிக் காட்டுவதுடன் வழிகாட்டிக் கோவையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் மேற்கூறப்பட்ட பிரகாரம் ஏனைய முறைமைகளில் பயன்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் போன்ற நடவடிக்கைகளைக் கவனத்திற்கொள்ளும் வகையில் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை மீண்டும் கோர வேண்டி | 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் போன்ற நடவடிக்கைகளைக் கவனத்திற்கொள்ளும் வகையில் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை மீண்டும் கோர வேண்டி இருந்த போதிலும் குழிகள் தோண்டும் 73 இயந்திரங்கள் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை மீறியமை தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதிலும் குழிகள் தோண்டும் 73 இயந்திரங்கள் அரச வணிக நானாவித கூட்டுத்தாபனத்திற்கு முழுமையான பொருள் அளவையும் வழங்க முடியாதிருந்தமையால் கால நீடிப்பு வழங்குமாறு கோரப்பட்டதன் காரணமாக அது தொடர்பான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு கையளிப்பதற்குப் பதிலாக பொது முகாமையாளரின் அங்கீகாரத்தில் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையைப் பயன்படுத்தி தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து STIHL BT 230 வகையின் குழிகள் தோண்டும் 01 இயந்திரம் ரூபா 99,608 வீதம் 73 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரச வணிக நானாவித கூட்டுத்தாபனத்திற்கு முழுமையான பொருள் அளவையும் வழங்க முடியாதிருந்தமையால் கால நீடிப்பு வழங்குமாறு கோரப்பட்டதன் காரணமாக அது தொடர்பான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு கையளிப்பதற்குப் பதிலாக பொது முகாமையாளரின் அங்கீகாரத்தில் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையைப் பயன்படுத்தி தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து STIHL BT 230 வகையின் குழிகள் தோண்டும் 01 இயந்திரம் ரூபா 99,608 வீதம் 73 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டட்டது. | |
| (இ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.3(ஆ) பிரிவின் பிரகாரம் முறையான உடன்படிக்கையின்றி 2021 இன் பாதீட்டு நிதிஏற்பாட்டின் கீழ் 13,000 டொலமைட் மெற்றிக்தொன் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து ரூபா 101 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு இணங்கி 2022 ஆம் ஆண்டின் இறுதிவரையில் டொலமைட் மெற்றிக்தொன் 533 மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக டொலமைட் பெறுமதி ரூபா 2 மில்லியன் தொகையும் போக்குவரத்துச் செலவினம் ரூபா 2 மில்லியன் தொகையுமாக இருந்த போதும் இணங்கப்பட்ட டொலமைட் | டொலமைட் கட்டளை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. டொலமைட் அளவு ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களின் மூலம் கட்டளையிடப்பட்டுள்ளது. எனினும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு 08 மாத காலத்தில் டொலமைட் வழங்குவதற்கு இயலுமை முடியுமாக இருந்து டொலமைட் மெற்றிக்தொன் 533 மாத்திரமாகும். டொலமைட் கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டியாளர் விலை முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. அதன் போது அரச நிறுவன மொன்றான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கிடையே | டொலமைட் கொள்வனவு செய்வதற்குக் கிடைத்த தொகையில் எஞ்சிய அளவு திறைசேரி அங்கீகாரமின்றி ஏனைய பணிகளுக்காக செலவினங்களைச் செய்ய முடியாது. |

| | | |
|---|---|---|
| அளவில் 96 சதவீதம் வழங்கப்பட்டமையின் காரணமாக மற்றும் வழங்கல் தாமதம் அடைந்ததன் காரணமாகவும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த எஞ்சிய ரூபா 97 மில்லியன் மொத்த தொகையும் ‘‘ஏனைய மானியங்களை செலுத்துதல் மற்றும் நிறுவனம் சார்ந்த மூலதன நடவடிக்கைகள்’’ இற்குப் பயன்படுத்துவதற்கு திரைசேரி அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினால் 2022 திசெம்பர் 21 ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. ஆரம்ப செலவினங்களைச் செய்து மற்றும் முறையான உடன்படிக்கை இன்றி அதிகார சபை இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்தமையால் செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதிருந்தமையால் தோல்வியடைந்த செயற் திட்டத்திற்கு உட்பட்டிருந்தது. அவ்வாறே ‘‘ஏனைய மானியங்களை செலுத்துதல் மற்றும் நிறுவனம் சார்ந்த மூலதன நடவடிக்கைகள்’’ இற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை இனங்காண்பதற்கு உரிய அளவில் போதியளவான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவையான டொலமைட் அளவு கொள்வனவுக் கட்டளை மூலம் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. டொலமைட் கொள்வனவு செய்ததன் பின்னர் மிகுதி பணம் பணிப்பாளர் அங்கீகாரத்தின் கீழ் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் நிதி உதவிகளுக்காக பயன்படுத்தப்பட்டு விடுவிப்பதற்கு கடப்பாடுகளுடன் விடுவிப்பதற்கு மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அதிகார சபையில் அங்கீகரிக்கப்பட்ட வலய தேயிலை அபிவிருத்தி கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 26 ஆக இருந்த | வலய தேயிலை அபிவிருத்தி கள உத்தியோகத்தர் வெற்றிடயங்களை நிரப்புவதற்காக ஊழியர்களை ஆட்சேர்த்தல் தொடர்பாக | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் |

போதிலும் உள்ளபடியன உத்தியோகத்தர்கள் 14 மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்தமையால் தேயிலை விவசாயிகள் மற்றும் சங்கங்களுடன் தொடர்படுகின்ற இந்த உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அதிகார சபையின் மானிய வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் நடைபெற்ற அரசாங்கத்தின் வரையறைகளும் இடமளிக்கா திருந்ததுடன் எனினும் அதிகார சபையின் பணிகளை அமுல்படுத்திச் செல்வதற்காக பதிற் கடமை அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பின்பற்றி உரிய வெற்றிடங்களில் கடமைகளை சரியான பிரகாரம் அமுல்படுத்தி நிறுவனம்சார் நடவடிக்கைகளின் உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட்டுள்ளது.

எண்ணிக்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.